அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 150 /2017
தேதி : 03.12.2017

## ஆர் கே நகர் இடைத்தேர்தலில் போட்டியிடப் போவதில்லை

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் அறிக்கை.

2011 ஆம் ஆண்டிலிருந்து, கூட்டணிக் கட்சி என்ற முறையில், அதிமுகவை ஆதரித்து சட்டமன்ற பொதுத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தல், நாடாளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் பல்வேறு சட்டமன்ற தொகுதிகளில் இடைத்தேர்தல்கள் என அனைத்து தேர்தல்களிலும், சமத்துவ மக்கள் கட்சி சார்பில் பிரச்சாரம் மேற்கொண்டு வந்திருக்கிறோம்.

2015 இல், மறைந்த முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஆர் கே நகர் சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிட்ட போதும், 2016 இல் சட்டமன்ற பொதுத்தேர்தலில் மீண்டும் அங்கு போட்டியிட்ட போதும், பிரச்சாரம் மேற்கொண்டு அவர்களின் வெற்றிக்கு உழைத்தோம்.

முன்னாள் முதலமைச்சர் மறைவிற்கு பிறகு, இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் அறிவிக்கப்பட்ட இடைத்தேர்தலில், அதிமுகவில் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து, முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்களின் நிலைப்பாட்டையொட்டியும், இந்த ஆட்சி ஐந்தாண்டு காலம் நீடிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும், அவர் ஆதரித்த டிடிவி தினகரன் அவர்களுக்கு தொப்பி சின்னத்தில் ஆதரவு கேட்டு பிரச்சாரம் மேற்கொண்டேன். ஆனால் பல்வேறு காரணங்களால் இடைத்தேர்தலுக்கு தடை விதிக்கப்பட்டது.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



எடப்பாடி பழனிச்சாமி தொப்பி சின்னத்திலும், ஓ. பன்னீர்செல்வம் இரட்டை மின் விளக்கு சின்னத்திலும், தனித்தனியாக வாக்குக் கேட்டு பிரச்சாரம் செய்துவிட்டு, இன்று ஒன்றாக இணைந்து, இரட்டை இலைக்கு பிரச்சாரம் செய்வது என்ற அவர்கள் நிலைப்பாட்டை, எட்டே மாத இடைவெளியில் சூழ்நிலைக்கு ஏற்றபடி மாற்றிக்கொள்வதற்கு, அவர்களுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம்.

ஆனால் அதே கால இடைவெளியில், நான் சூழ்நிலைக்கு ஏற்றவாறு என்னை மாற்றிக்கொண்டு, ஒரே தொகுதியில் முதலில் தொப்பி சின்னத்திற்கும், தற்போது இரட்டை இலை சின்னத்திற்கும் பிரச்சாரம் செய்வதற்கு என் மனசாட்சி இடமளிக்கவில்லை. மேலும், அவ்வப்போது இப்படிப்பட்ட நிறம்மாறும் அரசியலை என் சுயமரியாதையும், தன்மானமும் ஏற்றுக்கொள்ளவில்லை.

சமீபத்தில் நடைபெற்ற எங்கள் உயர்மட்டக் குழு மற்றும் மாவட்டச் செயலாளர் கூட்டத்தில், இடைத்தேர்தலில் கட்சியின் நிலைப்பாடு குறித்து முடிவெடுக்க, எனக்கு முழு அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

ஓர் அரசியல் இயக்கம், ஒன்று தேர்தலில் போட்டியிடவேண்டும், அல்லது கூட்டணிக் கட்சிக்கு ஆதரவு தரவேண்டும் என்பதே பெரும்பாலும் நான் வலியுறுத்த விரும்புவது. ஆனால் இந்த இடைத்தேர்தலில் ஒரு நெருடலான மனநிலையில் இருப்பதால், எனது மனசாட்சியின் குரலை மதித்து, இத்தேர்தலில் சமத்துவ மக்கள் கட்சி, தனித்துப் போட்டியிடவோ, வேறு எந்தக் கட்சிக்கும் ஆதரவு அளிக்கவோ போவதில்லை என்று முடிவு செய்துள்ளேன்.

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in
Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



இந்த இடைத்தேர்தல் மட்டுமே இலக்கு என்றில்லாமல், வரவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் 2019 நாடாளுமன்றப் பொதுத்தேர்தல்களை மனதில் கொண்டு, அதற்கேற்ப கட்சியை தயார்படுத்தவும், மேலும் வலுப்படுத்தவும், செயல்திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுவருகிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தல் ஆணையம், காவல்துறை, கண்காணிப்புக் குழு என அனைத்தையும் மதித்து தேர்தல் விதி மீறல்கள் இல்லாத தேர்தலாக இத்தேர்தல் அமையவேண்டும். தேர்தலில் வெற்றிபெறுவது யாராக இருந்தாலும், இறுதி வெற்றி ஜனநாயகத்திற்குத்தான் என்பதை வாக்காளர்களும், அரசியல் இயக்கங்களும் நிலைநிறுத்தவேண்டும்.

நன்றி வணக்கம்

உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com